Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Diet at the Stage of Poverty in Sangam Literature

**Dr. C. Sheeba**, Ellmmavilai, Manakkavilai, Manalikarai, Kanniyakumari District.
ORCiD: https://orcid.org/0009-0003-8748-6858
**DOI: 10.5281/zenodo.8397760**

## Abstract

*"Purananooru" proclaims that food is the source of life and those who give food are life givers of humanity. When Pannan was hailed as an appetite healer, Manimekalai's goal of eliminating hunger was the moral virtue of people's lives. It is evidently seen in the greatest Tamil classic "Silapathikaram". When the poverty level is reached and people endure severe poverty, they try to survive by eating whatever they can. They pluck the spinach growing in the waste lands and cooked and eat it. This situation was seen in the ancient Tamil society, but more often than not, artists and poets are made to suffer poverty rather than ordinary people. So, this article discusses about the food that poets and artists eat during poverty.*

**Keywords:** Poverty, Poets, Panars, Sangam Literature.

## References

[1] Ilankumaran, *Sanga Ilakkiam Moolamum Uraiyum Purnanooru*. Varthamanan Publication, Chennai, 2022.
[2] Laksmi, J. P. *Sanga Kala Samooga Amaippil Panarkalin Marabum Neetchiyum*. Kavya Publication, Chennai, 2018.
[3] Mathaiyan, P. *Tamil Chevviyal Ilakkiayangal Kalmaumu Karuthum*. New Century Book House, Chennai, 2011.
[4] Mohan, R. *Pathupattu Moolamum Uraiyum*. New Century Book House, Chennai, 2011.
[5] Namchivayam, C. *Tamilar Unavu*. International Institute of Tamil Studies, Chennai, 2003.
[6] Rajgouthaman. *Pattum Thogaiyum Tholkappiamum Tamil Samooga Uruvakkamum*. Tamilini Publication, Chennai, 2006.
[7] Venkatasamy, Mayilai Seeni, *Unavu Nool*. Manivasagar Publication, Chidhambaram, 1965.
[8] P. Pusphavalli. "Panar Society and Migration Theory on the Day the Land Blossomed." Vol 4, Issue 13, 2022.
[9] Dr. S. Srinivasan. "Perumpanatrupadai Amaippum Pulavanin Nokkum." *Shanlax International Tamil Journal*, Vol 2, Issue 1, 2017.
[10] Dr. S. Manimegalai. "Sanga Ilakiyathil Unavu Patriya Karuthakkangal." *Shanlax International Tamil Journal*, Vol 3, Issue 1, 2018.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# சங்க இலக்கியத்தில் வறுமைநிலை உணவுமுறை

**முனைவர் செ. ஷீபா,** எல்லம்மாவிளை, மணக்காவிளை, மணலிக்கரை, கன்னியாகுமரி மாவட்டம்.
ORCiD: https://orcid.org/0009-0003-8748-6858
DOI: 10.5281/zenodo.8397760

**ஆய்வுச் சுருக்கம்**

*உணவே வாழ்வின் ஆதாரம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று புறநானூறு பறைசாற்றுவது அதனால் தான். பசிப்பிணி மருத்துவன் என்று பண்ணன் போற்றப்பட்டதும், பசிப் பிணியை இல்லாமல் செய்யும் மணிமேகலையின் நோக்கமும் மக்களின் பசியைப் போக்குவதை வாழ்வியல் அறமாகக் கொண்டிருந்தனர். வறுமை நிலை அடையும் போது மக்கள் எதையேனும் தின்று உயிர் வாழ முயற்சிக்கின்றனர். குப்பையில் விளையும் கீரையை பிடுங்கி வந்து அதனை அவித்து தின்கின்றனர். இந்நிலைமை உடைமைச் சமூகத்தில் இயல்பானது எனினும் சாதாரண மக்கள் இந்நிலைக்கு ஆளாவதை எடுத்துக் காட்டுவதை விட கலைஞர்கள், புலவர்கள் வறுமை நிலைக்கு ஆளாவது பற்றி மிகுதியாகச் சுட்டப்படுகிறது. இக்கட்டுரை புலவர் மற்றும் கலைஞர்கள் வறுமை நிலையின் போது உண்ணும் உணவினைப் பற்றி எடுத்துரைப்பதாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** வறுமை, புலவர்கள், பாணர்கள், சங்க காலம்.

**முன்னுரை**

மனிதச் சமுதாயத்தில் வேட்டை, மேய்ச்சல், வேளாண்மை என்னும் நிலைகளில் மனிதர்கள் வளர்ச்சி பெற்று வந்துள்ளனர். உபரி உற்பத்தி அதிகரித்த வேளாண்மைச் சமூக நிலையில் கூட தொல் பசி அறியா துளங்கா இருக்கை என்ற புகழ் பெற்ற ஊர் இருந்த நிலையில் கூட பசியுடன் இருப்போர் வாழ்ந்திருந்தனர் என்பதை அறியத் தரும் சங்க இலக்கியத்தில் வறுமை நிலையில் வாழ்ந்தவர்கள் எனச் சில இனக்குழுக்கள் கூறப்படுகின்றனர். அவர்களில் பாணர்கள் முதன்மை இடம் வகிக்கின்றனர். அது போல புலவர்களில் சிலரும் வறுமை நிலையில் கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்தனர் என்பதைக் காணமுடிகிறது. வறுமை என்பது மனித சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக சான்றோர்களால் குறிப்பிடப்படுகிறது. இளமையில் வறுமை கொடிது என்று ஔவையார் கூறினாலும் எந்நிலையிலும் வறுமை என்பது துன்பம் தரக் கூடியதேயாகும். அந்நிலையில் மனிதர்கள் தம் இயல்பான நிலையை இழந்து விடுகின்றனர். உணவின்றி கிடைத்ததை உண்ணும் நிலைக்கு ஆளாகின்றனர். சமீப காலத்து உதாரணங்களாக சோமாலியா போன்று கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கிடைத்ததைத் தின்னும் நிலைக்கு ஆளாயினர். இந்தியாவில் கூட தொடக்க காலத்தில் கடுமையான பஞ்ச காலங்கள் இருந்திருக்கின்றன. அந்நிலையில் மக்கள் உணவிற்காக தமக்குள் சண்டையிட்டுக் கொண்ட நிகழ்வுகளும்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்என்: 2583-0481

நடந்தேறி இருக்கின்றன. விவிலியத்தில் ஏழு வருடம் பஞ்சம் வருமெனக் கூறப்படும் கதையில் மெத்தமான இருந்த மக்கள் உணவிற்காக கடும் நெருக்கடிகளைச் சந்தித்தனர் என்று காணப்படுகிறது. இக்கட்டுரையில் சங்க காலத்திய சூழலில் வறுமை நிலை எய்தியவர்களாக வர்ணிக்கப்படும் கலைஞர்கள் அந்நிலையில் உண்டதாகக் கூறப்படும் உணவு முறையினைப் பற்றிக் காணலாம்.

**வறுமை நிலை**

மனிதர்கள் உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்று அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொள்ள தொடர்ந்து உழைத்து வருகின்றனர். அவ்வாறு உழைக்கின்ற மக்களில் பெரும்பாலோர் உரிய வசதிகளை அடைவதில்லை. உழைப்பு அனைத்தும் பெரும் நிலவுடைமையாளர்களால் உறிஞ்சப்படுவதால் சமுதாயத்தில் ஒரு சாரார் தம் உழைப்பை முழுமையாகக் கொடுத்த பின்னும் ஏழைகளாகவும் உணவுக்கும் உடைக்கும் வழியில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். பாணர்களும், பொருநர்களும் உணவுக்கும் வழியில்லாதவர்களாக மாறும் நிலை என்பது அவர்களது கலை மீதான விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. வேறு தொழில்களுக்குச் செல்லாமல் கலையைக் காப்பாற்றும் எண்ணத்தால் வறுமை நிலையுறுகின்றனர் எனக் கூறப்படுகிறது. “ஆற்றுப்படுத்தும் பொருநன் அடுகின்ற பசியாலே வருந்தின தனது சுற்றத்தோடும் தொன்றுதொட்டு வந்த பசியோடும் வருகிறான். பசி உன்னைக் கைவிடுதல் வேண்டுமானால் காலம் தாழ்த்தாமல் புறப்படு (60-63) என்று ஆற்றுப்படுத்தும் பொருநன் கூறுமிடத்து வறுமைச் சூழல் அமைகிறது. எதிர்ப்பட்ட பொருநன் மற்றும் அவன் சுற்றத்தின் வறுமையைப் போக்க நினைக்கும் உணர்வினை இச்செய்தி காட்டுகிறது” (சு.சீனிவாசன், ப. 48) என்ற கூற்றானது வறுமை நிலையில் இருக்கும் பொருநன். தன் வறுமை நீங்க புரவலன் அல்லது மன்னனை நோக்கி ஆற்றுப்படுத்தப்படும் சுட்டப்படுகிறது.

**உணவு**

மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு ஆதாரமானவை காற்று, நீர், உணவு ஆகியனவாகும். உணவென்பது மனிதர்களுக்கு இயற்கையில் கிடைத்தன. இயற்கையாகக் கிடைத்ததை உண்டதை பச்சையான உணவு என்று அழைத்தனர். உணவு சேகரித்தல் சமூகத்தில்தான் கிடைத்தவற்றை அப்படியே உண்ணும் நிலை இருந்தது. அந்நிலை பின்னர் மாற்றத்திற்கு உள்ளானது. “ஆதிகாலத்தில் மற்றப் பிராணிகளைப் போலவே மனிதனும் உணவைச் சமைக்காமல் அருந்தினான். பிறகு, நெருப்பைக் கண்டுபிடித்துச் சமைத்து உணவுகளை உண்ணப் பழகிக் கொண்டான். வெவ்வேறு வகைகளில் விலங்குகளிலிருந்து பிரிந்து உயர்வடைந்தது போலவே மனிதன் உணவு உண்பதிலும் விலங்குகளிலிருந்து பிரிந்து உயர்வடைந்து விட்டான்” (உணவு நூல், ப. 1) என்ற மயிலைச் சீனி வேங்கடசாமியின் கருத்தானது மனிதர்கள் உணவினை பக்குவப்படுத்தி உண்ணும் நிலைக்கு நாகரிகமடைந்தமை பற்றி கூறுகிறது.உணவுக்கு அடிப்படையாக இருப்பது நிலமும் நீரும் என்று குறிப்பதை,

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே... (புறம்., 18: 9 - 10)**

என்று புறநானூற்று வரிகள் உணர்த்துகின்றன. உணவு பல்வேறு முறைகளில் மனிதர்களால் பெறப்படுகிறது. எனினும் உணவைத் தருவது நீரும் நிலமுமே ஆகும். உணவால் உருவானதே உயிருடன் கூடிய உடல் ஆகும். துறவிகள் சிலர் நீரை மட்டும் உணவாகக் கொள்வதுண்டு. ஆனால் அனைத்து மனிதர்களால் அவ்வாறு இருக்க முடியாது. பஞ்ச காலத்தில் உணவு கிடைக்காத போது மனிதர்களிடம் ஏற்படும் மாற்றங்கள் உணவின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன என்கிறார் சே. நமசிவாசம். "மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அத்தனை உணவுப் பொருட்களும் இயற்கை தருகின்ற நன்கொடையாகும். உணவுப் பொருட்களும் ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் என்பதைப் போல உணவில்லாத மனிதனும் உயிரற்ற மனிதன் எனலாம். பருவ மழை தவறி ஓராண்டுக் காலமோ இரண்டு மூன்று ஆண்டுகளோ நெல் விளையாமல் போய் விட்டால் மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு வேதனைக்குள்ளாகிறார்கள். அப்பொழுது ஒழுக்கம் கெட்டு விடுகிறது. இரக்கமும் தர்மமும் குடிபெயர்ந்து போய் விடுகின்றன." (தமிழர் உணவு, ப. 2) என்ற கூற்றினால் இதனை அறிந்து கொள்ளலாம். மேலும் "தமிழக மக்கள் அனைவரும் ஒரே வகையான உணவை உண்டார்கள் என்று சொல்வதற்கு எவ்விதச் சான்றும் இல்லை. இயற்கையாக அமைந்த நிலப்பாகுபாடுகளில் ஆங்காங்கு கிடைத்த பொருள்களையம் தங்கள் முயற்சியில் தட்ப வெப்ப நிலைக்கேற்ப உற்பத்தி செய்த பொருள்களைக் கொண்டு தங்கள் உணவு வகைகளை தயாரித்துக் கொண்டர்கள்" (சி. மணிமேகலை, ப. 105) என்ற கூற்றினால் திணை நிலைக்கு ஏற்ற உணவுகளை உட்கொண்டார்கள் என்பதும் இயற்கையாகக் கிடைத்த உணவுகளையும் தாம் தயாரித்த உணவுகளையும் உட்கொண்டர்கள் என்பதும் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இயற்கையில் கிடைத்தவற்றையும் மாமிசத்தையும் உண்டனர் என்பதைக் காணமுடிகிறது.

**கூத்துக் கலைஞர்கள் மற்றும் புலவர் வறுமை**

சங்க சமுதாயத்தில் புலமை சான்றோரும் கலைஞர்களும் தத்தம் புலமையினால் வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்பவர்களாக இருந்துள்ளார்கள். மன்னர்களையும் புரவலர்களையும் சார்ந்திருந்த இவர்கள் அவர்களால் பொருள் வழங்கப்பட்டு அவற்றைக் கொண்டு வாழ்ந்து வருபவர்கள் ஆனார்கள். கூத்துக் கலைகளில் ஈடுபடுவர்களில் பாணர்களும் முதன்மை பெறுகின்றனர். அவர்கள் யாழ் என்னும் இசைக் கருவி கொண்டு இசைக்கவும் பாடவும் செய்கின்றனர். பாணர்கள் சேரிகளில் வாழ்ந்தார்கள் என்பதால் அவர்களது குடியிருப்பு பாண்சேரி என்று அழைக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது "பாணர் வாழிடத்தைச் சேரி அல்லது பாண்சேரி என்னும் சொல்லால் வழங்கியுள்ளனர். பாணர் மீன்பிடி தொழில் செய்தனர் என்றும் அவ்வாறு பெற்ற மீனை மனையிடத்து மரங்கள் தோறும் திருத்தம் செய்து பதப்படுத்தியுள்ளனர் என்றும் இதனால் பாணர் குழு வாழ்ந்த இடம் பாண்சேரி என வழங்கப்பட்டது" (சங்க காலச் சமூக அமைப்பில் பாணர்களின் மரபும் நீட்சியும், ப. 59) என்று

கூறப்படுகிறது. பாணர்கள் வறுமையுற்றிருந்த நிலைமையினை "உடும்பைத் தோல் உரித்தாற் போல் எலும்பு எழும்பிய விலாவை உடைய சுற்றத்தில் வாட்டும் பசியை நீக்குபவரை காணாமல் கேட்பவர் பலராயினும் சிலரே விரும்பிக் கேட்கும் கலைத்திறனை எண்ணி மிகுதியாகத் துன்புற்று இங்கே என்ன செய்கிறாய் பாணனே என்று கோவூர்க்கிழார் பாடல் வழி பாணர்களின் வறுமை நிலை உணர முடிகிறது" (ப. புஷ்பவள்ளி, ப. 183) என்ற கூற்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. புலவர் பாணர் ஆகியோர் வறுமையுற்றிருந்த நிலையில் அவர்களுக்குப் புரவலர்களும் மன்னர்களும் பல்வேறு உணவுகளைக் கொடுத்து உபசரித்தனர் என்பதைப் பாடல்கள் சுட்டுகின்றன. "அக்கால மன்னர்களும் மறவர்களும் புரிந்த போர்களுக்குப் அடுத்தபடியாக அந்த மன்னர்கள், வேந்தர்கள் தங்களைப் பாடி பரிசில் பெற வந்த புலவர்களுக்கும் அப்புலவர்கள் நாடக பாணியில் அமைந்த கூற்றுகளுக்குத் கிணைவன், பொருநன், விறலி, பாணன், கூத்தன் முதலான இனக்குழு வாழ்வின் எச்சங்களாகி பொழுது போக்கி வயிறு வளர்க்கும் இரவலர்களாகி விட்டவர்களுக்கும் வழங்கிய பரிசில் மற்றும் உணவு, உடை, பற்றிய பாடல்களே மிகுதி. இரவலர் நிலைக்குத் தாழ்ந்து விட்ட தொன்மைக் குடிகளின் கூற்றுக்களாக புலவர்கள் இயற்றிய பாடல்களின் புதிய பரிமாணமாக ஆற்றுப்படை என்ற துறை உருவாயிற்று" (பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப. 209) என்ற கூற்றின் வழி ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டும் பல்வேறு கலைஞர்களின் வாழ்வியல் தாழ்ந்த நிலைக்கு ஆளானதைப் பற்றி எடுத்துரைக்கிறார் ராஜ்கௌதமன். பண்டைக் காலத்தில் வாழ்ந்த இனக்குழுச் சமூகத்தினராகக் கருதப்படக் கூடியவர்களாகவே இவர்கள் இருந்தனர். இவர்களின் வாழ்நிலை நாடோடிகளாக வாழ்ந்தமையால் நிலையான வருவாய் இன்றி இருந்தது. தாம் சென்று ஒவ்வொரு ஊரிலும் கூத்துக்கள் நடத்தியும் மன்னர்களிடம் இரந்தும், புரவலர்களிடம் இரந்துமே வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொண்டனர் எனக் காணமுடிகிறது. அது போலவே புலவர்களின் நிலையும் காணப்பட்டது என்பதை "அரசு உருவாகத் தலைப்பட்ட சங்க காலத்தில் புலவர், பாணர் என்னும் வேறுபாடு அஃதாவது அறிஞர், கலைஞர் எனும் வேறுபாடு கவனத்தில் கொள்ளப்பட்டதைப் போன்று புலவர்களுக்குள்ளும் தரமுடையோர் அஃதில்லார் என வேறுபாடு பார்க்கப்பட்டுள்ளது.

**வரிசையறிதலோ அரிதே பெரிதும்**
**ஈதல் எளிதே... (புறம்., 121: 3 - 4)**

என வரிசையறிதல் எனும் தரப்படுத்தம் கவனத்தில் கொள்ளப்பட்ட நிலையில் கபிலர், மாங்குடி மருதன் போன்ற புலவர்களால் பாடப்படுவதே உயர்வானதாகக் கருதப்பட்டுள்ளது. இதனால் குறிப்பிட்ட புலவர்கள் பலர் புறந்தள்ளப்படுகின்றனர். இத்தகைய புலவர்கள் சிலர் வறுமை நிலைக்கு ஆட்பட்டுப் போகின்றனர். புறநானூற்றின் பரிசிலர் கடாநிலை, பரிசில்துறைப் பாடல்கள் புலவர் சிலரின் வறுமையை வெளிக்காட்டுகின்றன" (தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், ப. 178) என்று சங்க காலச் சமூக நிலை, அரச

உருவாக்கத்தின் பின்னணி, புலவர், பாணர் வேறுபாடு, புலவர்களுக்குள்ளும் இருந்த வரிசையறிதல் வேறுபாடு ஆகியவற்றின் ஊடாக புலவர்கள் வறுமையுற்றிருந்த நிலை ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கிறார் பெ.மாதையன். புலவர்கள் மற்றும் கூத்துக் கலைஞர்களான பாணர், கூத்தர், பொருநர் ஆகியோர் வறுமை நிலையில் வாழ்ந்திருந்த போது அவர்களை வறுமை நிலையினின்றும் மாறுவதற்காக புரவலர்களையும், மன்னர்களையும் நோக்கி ஆற்றுப்படுத்தப்பட்டனர். மன்னர்களிடம் அவர்கள் பெறும் பரிசில்கள் குறித்து பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**வறுமை நிலை உணவு**

மனிதர்கள் வறுமை நிலை எய்தும் போது கிடைப்பதை உண்ணும் நிலைக்கு ஆளாகின்றனர். கீரையை உப்பில்லாமல் சமைத்து உண்ணும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர் என்பதைச் சங்கப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**திறவாக் கண்ண சாய்செவிக் குருளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த**
**பூழி பூத்த புழல்காளாம்பி**
**ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்**
**வளைக்கை கிணைமகள் வள் உகிர்க் குறைத்த**
**குப்பை வேலை உப்புஇலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணி கடை அடைத்து (சிறுபாண்., 130-138)**

என்னும் பாடலடிகளில் கூறப்படும் செய்தியில் வறுமை நிலையில் உள்ள பாணனின் வீட்டின் நிலைமை பற்றிக் கூறப்படுகிறது. விழிக்காத கண்ணை உடைய நாயானது தான் ஈன்ற குட்டிகளுக்கு பால் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது. இது பாணனின் நிலையோடு ஒப்பக் கூறப்பட்டதாகும். அவ்வாறு இருக்கும் நாய் படுத்துறங்கும் அடுப்பங்கரையை உடையது பாணின் வீடாகும். காளான் பூத்துக் கிடக்கும் நிலையில் உள்ள சுவர்களைக் கொண்ட வீடு அவனுடையது. அவனுடைய மனைவியானவள் கடும்பசியைப் பொறுக்க முடியாது குப்பையில் வேளைக் கீரையைப் பறித்து உப்பு கூட இல்லாமல் அவித்து பிறர் கண்டால் தம்மை இழிவாகக் கருதுவர் எனக் கதவினை அடைத்துக் கொண்டு உண்பர் எனக் கூறப்படுகிறது. குப்பையில் விளையும் கீரை எனக் குறிப்பிடப்படுவது உண்பதற்கான ஓர் கீரை வகையாகக் கொள்ளலாம். மிகுந்த வறுமை நிலையில் வேறு வழியின்றி பறித்து உண்பதற்கான கீரை வேளைக் கீரை இங்கு குறிப்பிடப்படுகிறது. எயிற்றியர் குடிசைகளுக்கு பாணர்கள் வரும் போது எயினர்கள் புல்லரிசியினைக் கொண்டு உணவு சமைத்துத் தருவர் எனக் கூறப்படுகிறது.

**மான்தோல் பள்ளி மகவொடு முடங்கி**

**ஈன்பிணவு ஒழியப் போகி நோன்காழ்**
**இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்**
**உளிவாய்ச் சுரையின் மிளிர வேண்டி**
**இருநிலக் குரம்பைப் படுநீறு ஆடி**
**நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர் (பெரும்பாண்., 89 - 94)**

என்னும் பாடலடிகளில் மான் தோல் படுக்கையில் ஈன்ற குழந்தையுடன் படுத்துக் கிடக்கும் எயிற்றி அவளைத் தவிர பிற எயிற்றியப் பெண்கள் பூணிட்ட கோலினால் உளி போன்ற வாயை உடைய பாறையைக் கொண்டு கரிய காம்பு நிலத்தைக் கிளறி புல்லரிசியினை வாரிக் கொண்டு வருகின்றனர். அதனைக் கொண்டு உணவு சமைத்து தருவது பற்றிக் கூறப்படுகிறது. பெருஞ்சித்திரனார் குமண வள்ளலிடம் பரிசில்பெற வரும் போது தன் குடும்பத்தின் வறுமை பற்றிக் கூறுகிறார்.

**முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு உப்பு இன்று**
**நீருலை யாக ஏற்றி மோரின்று**
**அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து**
**மாசொடு குறைந்த உடுக்கையள் (புறம். 159: 8 - 13)**

என்னும் பாடலடிகளில் பெருஞ்சித்திரனார் தன் தாயின் நிலைமை பற்றிக் கூறுகிறார். கண் தெரியாத முற்றத்திற்குப் போகவும் முடியாத நிலையில் இருக்கும் முதிர் வயதினள். அடுத்தடுத்துப் பறித்தலால் குப்பைக் கீரையின் இளந்தளிர்களைப் பறித்து உப்பு இடவும் வழியின்றி நீரை உலையாக ஏற்றிக் காய்ச்சி மோரில்லாமல் சோற்றுப் பருக்கையை மறந்து கீரையைத் தின்று உயிர் வாழ்கிறாள் என்று கூறுகிறார். கூழும் சோறும் இல்லாத குழந்தை பால் இன்மையால் தளர்ந்த மார்பகத்தினின்றும் பால் வராமையால் அழுதமை,

**பால் இல் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்**
**கூழும் சோறும் கடைஇ ஊழின்**
**உள் இல் வறுங்கலம் திறந்து திறந்து அழுக் கண்டு (புறம்., 160: 19 - 21)**

என்ற பாடலடிகளால் கூறப்படுகிறது. வறுமை நிலையில் கூழ் குடிப்பார்கள் என்று கருதினால் அதுவும் கூட இல்லாத நிலையினைச் சுட்டுகிறார். பெருஞ்சித்திரனார். இவ்வாறு வறுமை நிலை ஏற்படும் போது புலவர்களும், பாணர்களும் கூடவேளைக் கீரையை அவித்துத் தின்னும் வழக்கம் காணப்படுவதை பாடல்கள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்று கூறப்படுகிறது. நிலமும் நீரும் இணைந்தே மனிதர்களும் பிற விலங்குகளும் உண்பதற்கான உணவைத்தருகின்றன. இதனை உணர்ந்தே புறநானூறு உண்டி முதற்றே உணவின் பிண்டம் என்றும் கூறுகிறது. மனிதர்கள் வறுமை நிலை அடையும் போது பெருந்துன்பத்திற்கு ஆளாகின்றனர். கிடைத்ததை தின்று வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பண்டைக் காலத்தில் இத்தகைய வறுமை நிலையை

கலைஞர்களும், புலவர்களும் அடைந்திருந்தனர் என்பதை பாடல்கள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. கொடுப்போர், பெறுவோர் என்னும் பாகுபாடு நிலவுடைமைச் சமூகத்தின் பெரும் பிரிவினையாக உருப் பெறும்போது இருப்போர் இல்லாதோர் என்னும் நிலை தொடரவே செய்யும். ஆற்றுப்படை நூல்களிலும் புறநானூற்றிலும் புலவர்கள், பாணர்கள் ஆகியோர் வறுமை நிலை அடையும் போது குப்பைக் கீரையை, அதன் தளிர்களைப் பறித்து அவித்துத் தின்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது. பால் சுரக்காத மார்பகத்தைக் கொண்ட பெண்கள் குழந்தைக்குப் பாலூட்ட முடியாத நிலை காணப்படுகிறது. வேளைக் கீரை அல்லது உப்பில்லாத கீரையை உணவாகக் கொள்ளும் நிலை அன்றைக்கு இருந்துள்ளது என்பது பொற்கால மேட்டிமைத்தன சித்திரிப்புகளுக்கு அப்பாலானது எனக் கொள்ள முடிகிறது.

**குறிப்புப் பட்டியல்**

[1] இளங்குமரன். *சங்க இலக்கியம் மூலமும் உரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2022.

[2] நமச்சிவாயம், சே. *தமிழர் உணவு.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.

[3] மாதையன், பெ. *தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.

[4] மோகன், இரா (உ.ஆ). *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.

[5] ராஜ்கௌதமன். *பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்.* தமிழினி வெளியீடு, சென்னை, 2006.

[6] லட்சுமி, ஜே. பி. *சங்க காலச் சமூக அமைப்பில் பாணர்களின் மரபும் நீட்சியும்.* காவ்யா பதிப்பகம், சென்னை, 2018.

[7] வேங்கடசாமி, மயிலை சீனி. *உணவு நூல்.* மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1965.

[8] ப. புஷ்பவள்ளி. நிலம் பூத்து மலர்ந்த நாளில் பாணர் சமூகமும் இடப்பெயர்ச்சிக் கோட்பாடும்." சர்வதேச தமிழ் ஆய்விதழ், மலர் 4, இதழ் 13, 2022.

[11] முனைவர் சு. ஸ்ரீனிவாசன். பெரும்பாணாற்றுப்படை அமைப்பும் புலவனின் நோக்கும்." ஷான்லக்ஸ் சர்வதேச தமிழ் இதழ், மலர் 2, இதழ் 1, 2017.

[9] முனைவர் சி. மணிமேகலை. "சங்க இலக்கியத்தில் உணவு பற்றிய கருத்தாக்கங்கள்." ஷான்லக்ஸ் சர்வதேச தமிழ் இதழ், மலர் 3, இதழ் 1, 2018.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.